பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 23 புதன்கிழமை 05.02.2025 | அதிர்வு 188

## எம்.பிக்களுக்கு வாகனம் இல்லை

**அரசு இன்று அறிவிப்பு**

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட மாட்டாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்துரையாடல்

## சஜித் தலைமையில் நாடாளுமன்றத்தில் இன்று

நாடாளுமன்ற விவகாரங்கள் உட்பட எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இன்று புதன்கிழமை காலை நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கூட்டாக இணைந்து செயற்படுவது தொடர்பாக எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வது இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாகும். 02



## மஹிந்த - இந்தியத் தூதுவர் திடீர் சந்திப்பு



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு இன்று புதன்கிழமை காலை கொழும்பு, விஜேராம வீதியில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசமும் இந்தச் சந்திப்பில் இணைந்துகொண்டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**எதிர்கால அரசியல்...**

இதன் மூலம் பலமான நாடாளு மன்றநடவடிக்கைகளைக்கொண்டமைந்த நாடாளுமன்றத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றும், அரசின் சிறந்த தீர் மானங்களுக்கு ஆதரவளிப்பது போலவே, நாட்டு மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பை வெளியிட்டு மக்கள் பக்கம் நாம் முன் னிற்போம் என்றும் எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ இங்கு தெரிவித் தார்.

நாடாளுமன்றக் குழுக்களில் கவனம் செலுத்தி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இங்கு சகல கட்சித் தலைவர்களும் தமது கருத்துக்களை எடுத்துரைத்து சுட்டிக்காட்டினர்.

கடந்த ஜனவரி 29ஆம் திகதியும் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத் தும் கட்சித் தலைவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கூடி இதேபோன்ற கலந்துரையாடலை நடத்தியதோடு, இன்று நடைபெற்ற கலந் துரையாடலும் இதன் தொடர்ச்சியாகும்.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்க் கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்களான கயந்த கருணாதிலக (எதிர்க்கட்சியின் பிரதம கொறடா), ஜே.சி. அலவதுவல (எதிர்க்கட்சியின் பிரதி அமைப்பாளர்), அஜித் பி. பெரேரா (எதிர்க்கட்சியின் பிரதி அமைப்பாளர்), ரிஷாத் பதியுதீன், நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, தயாசிறி ஜயசேகர, ரவி கருணாநாயக்க, ஜீவன் தொண்டமான், சிவஞானம் சிறீதரன், ப.சத்தியலிங்கம், செல்வம் அடைக் கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம் பலம், ரவூப் ஹக்கீம், நிசாம் காரியப்பர், வேலுசாமி இராதாகிருஷ்ணன், அனுராத ஜயரத்ன, டி.வீ.சானக மற்றும் காதர் மஸ் தான் முதலானோர் கலந்துகொண்ட னர்.




















# வேலை கிடைக்கவில்லை என்ற விரக்தியில் யாழில் இளைஞர் தூக்கிட்டு உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் வேலை கிடைக்கவில்லை என்ற விரக்தியில் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார்.

யாழ். கைலாச பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த தங்கவேல் விபுசன் (வயது 28) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி இளைஞர் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர். இருப்பினும் இரண்டு வருடங்களாக வேலை கிடைக்காத காரணத்தால் நேற்று செவ்வாய்க்கிழமை தனது வீட்டில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.





# லசந்த படுகொலை குற்றவாளிகளை விடுதலை செய்யும் நோக்கம் இல்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

'சண்டே லீடர்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைச் சம்பவத்தின் சந்தேக நபர்களை விடுதலை செய்யலாம் என சட்டமா அதிபர் பரிந்துரை செய்துள்ளமை குறித்து அரசு ஆராயும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த விவகாரத்தை மூடிமறைக்கும் நோக்கம் எதுவும் அரசுக்கு இல்லை. குற்றவாளிகளை விடுதலை செய்யும் நோக்கமும் இல்லை.

இந்த விவகாரத்தை முழுமையாக ஆராய்ந்து இந்த நாட்டு மக்களுக்கு நீதி வழங்குவோம். மக்கள் வழங்கிய ஆணையை அவமதிக்கமாட்டோம்.

சில யதார்த்தபூர்வமான நெருக்கடிகள் காரணமாகவே சில விசாரணைகள் தாமதமாகின்றன. அரசின் தலையீடுகளால் தாமதமாகவில்லை." - என்றார்.

இதேவேளை, ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான ஏனைய குற்றச் செயல்களுக்கு நீதி கோரி சுதந்திர ஊடக இயக்கமும் ஏனைய ஊடக நிறுவனங்களும் கறுப்பு ஜனவரியை அனுஷ்டிக்கும் தருணத்தில், லசந்த கொலை வழக்கில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூவர் விடுதலை செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டு சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க கையொப்பமிட்ட கடிதம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**எம்.பிக்களுக்கு...**

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் அதனை செய்ய முடியாது எனவும், எம்.பிக்களுக்கு வாகன பேமிட் வழங்கப்படாது எனவும் அவர் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் இன்றைய ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

"நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகனக் குழுவைப் பராமரிக்கவும், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவற்றை மீளப்பெறுவதும் அரசின் கொள்கை.

எனினும், தற்போதைய பொருளாதார சூழ்நிலையால் எம்.பிக்களுக்கு வாகன இறக்குமதி இடம்பெறாது." - என்று அவர் மேலும் கூறினார்.

# ஜனாதிபதி மாளிகை விடுவிப்பு பிரச்சினைகளுக்கான தீர்வாகாது

## ஈ.பி.டி.பியின் ஊடக இணைப்பாளர் சிறீகாந் சுட்டிக்காட்டு

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு யாழ்ப்பாணம் ஜனாதிபதி மாளிகைக்கானது அல்ல. அது அவர்களது அரசியல் உரிமை மற்றும் இருப்புக்கான அடையாளங்களைப் பாதுகாப்பதாகவே இருக்கின்றது."

– இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக இணைப்பாளர் சிறீகாந் பன்னீர்ச்செல்லவம் சுட்டிக்காட்டினார்.

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதை உணர்ந்தவராக பிரச்சினைக்கான தீர்வு விடயத்தைக் கையாள வேண்டுமே தவிர வெறும் அரசியல் தேவைகளுக்காக தமிழ் மக்களைப் பயன்படுத்த முற்படக் கூடாது." – என்றும் அவர் வலியுறுத்தினார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வடமராட்சியில் நடைற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது கடந்த கால




அரசுகளை மோசடிக்காரர் என்ற போர்வையில் குற்றம் சாட்டியதுடன், தான் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டுள்ளதாகவும், யாழ்ப்பாணத்திலுள்ள ஜனாதிபதி மாளிகை வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வியை மக்களிடம் கேட்டு மக்களின் உணர்வுகளுக்கேற்ப பொதுத் தேவைக்கு அதைக் கையளிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியிருந்தார்.

ஆனால், குறித்த விடயம் தமிழ் மக்களின் முதன்மையான அபிலாஷையாகவோ – தேவையாகவோ இருக்கவில்லை.

மாறாக அந்த மேடையில் தையிட்டி விகாரை வேண்டுமா, வேண்டாமா அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பது, காணி நிலங்களை விடுவிப்பது, அரசியல் உரிமை, மாகாண சபைத் தேர்தல் போன்றவற்றுக்குத் தீர்வுகள் வேண்டுமா, வேண்டாமா உள்ளிட்ட கேள்விகளை மக்களிடம் முன்வைத்து மக்களின் உணர்வுகளைத் தெரிந்து கொண்டிருக வேண்டும்.

இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். இவற்றுக்குத் தீர்வு கொடுக்க முன்வருவார் என்றே நாமும் எதிர்பார்த்தோம். ஆனால், அது நடக்கவில்லை.

மாறாக தனது ஆட்சியில் உள்ள குறைபாடுகளை மறைக்க யாழ்ப்பாணம் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வடக்கின் ஒட்டுமொத்த அதிகாரிகளையும் இயலாதவர்கள் என்ற போர்வையில் சித்தரிக்க ஜனாதிபதி முற்பட்டிருந்தார்.

இந்தப் போக்கும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகவே பார்க்க முடிகின்றது." – என்றார்.

# வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பிரகாரம் ஈழத் தமிழர்களுக்குத் தீர்வு வழங்குங்கள்

## இலண்டனில் கரிநாள் போராட்டத்தில் வலியுறுத்து



வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பிரகாரம் ஈழத் தமிழர்களுக்குத் தீர்வை வழங்க வேண்டும் என்று கோரி பிரித்தானியாவில் வாழும் தமிழர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை சர்வதேச கவனயீர்ப்புப் போராட்டமொன்றை இலண்டனில் முன்னெடுத்தனர்.


இலங்கையில் நேற்று சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட நிலையில் இதனைக் கரிநாளாகக் கருத வேண்டும் என இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் பிரித்தானியாவில் வாழும் ஈழ மற்றும் உலகத் தமிழர்களும் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டித்து போராட்டமொன்றை இலண்டனில் நேற்று முன்னெடுத்தனர்.

"தன்னாட்சிக்கான உரிமைக்குரல்" என்ற தொனிப்பொருளில் கீழ் இந்தப் போராட்டத்தைத் தமிழர்கள் முன்னெடுத்தனர்.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் பிரித்தானிய அரசு தார்மீக அடிப்படையில் காத்திரமான அரசியல் இராஜதந்திர நகர்வை வெளிப்படுத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

உலகத் தமிழினமாக அணிதிரண்டு சுதந்திர தமிழீழத்துக்காகப் போராடுவோம் என்றும் போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழர்கள் அறைகூவல் விடுத்தனர்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுவாசிக்கவும் சுதந்திரமில்லை

மனித வாழ்வுக்கும் - உலகில் உயிரிகளின் வாழ்வியக்கத்துக்கும் - மிக முக்கியமானது சுத்தமான காற்று. அடிப்படை வாழ்வாதாரங்களில் அது பிரதானமானது. உலகெங்கும் பரந்து வியாபித்திருக்கும் காற்றைக் கூட சுத்தமாகச் சுவாசிக்க முடியாத நிலைமையை நோக்கி உலகம் சென்று கொண்டிருக்கின்றது. அந்தப் பிரச்சினை சமுத்திரத்தினால் சூழப்பட்ட இலங்கை மக்களின் காலடிக்கும் வந்துள்ளது.

இலங்கை, இந்தியா உட்பட தெற்காசிய நாடுகளின் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளப் பக்கங்களில் கடந்த சில நாள்களாகக் 'காற்றின் தரம் வீழ்ச்சி' என்ற விடயம் அதிகம் பேசப்படுவதைக் காண முடிகின்றது.

வளிமண்டலத்தில் தரமான வாயுக்களின் சமநிலை குறைவடைந்து புகை, தூசுகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் போன்ற பல காரணங்களால் காற்றிலுள்ள மாசுக்களின் அளவு அதிகரிக்கிறது.

இதனால் மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு ஏற்படுத்தும் வகையில்காற்றின்தரம்வீழ்ச்சியடைந்து, மனிதன் மற்றும் பிற உயிரினங்கள் சுவாசிப்பதற்கு ஆரோக்கியமற்ற நிலைக்கு சூழல் காற்று செல்கின்றது.

இலங்கையில் காற்றின் மாசுபாடு குறித்து பிரதானமாக இரண்டு, மூன்று தரப்புகளிடமிருந்து எச்சரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன.

காற்றின் தரம் வீழ்ச்சியடைவதற்கு புகைபிடித்தலினால் உண்டாகும் புகை, அதிக வாகனப் போக்குவரத்தால் ஏற்படும் புகை, விவசாயக் கழிவுகளை எரித்தல், காடுகளை எரித்தல், பட்டாசு பொருள்களின் பாவனை, தொழிற்சாலைக் கழிவுகள், பழைய கட்டுமானங்கள் இடிப்பு, கழிவுப் பொருள்களை எரித்தல் மற்றும் புதிய கட்டுமான அதிகரிப்பு போன்ற மனித நடவடிக்கைகளே பிரதான காரணங்களாக அமைகின்றன. இலங்கையிலும் இவ்வாறான செயற்பாடுகள் அதிகமுள்ள சில மாவட்டங்களிலே காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படுகின்றது.

பொதுமக்கள், தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு, முடிந்த வரை முகக் கவசங்களை அணியுமாறும், சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் இன்று முதல் எதிர்வரும் சில நாள்களுக்கு காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படும் எனவும் அந்த அமைப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்று மாசுபாடு தொடர்புடைய நோய்களால் ஆண்டுதோறும் சுமார் 70 இலட்சம் பேர் தாங்கள் வாழ வேண்டிய காலத்திற்கு முன்னரே உயிரிழக்கின்றனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இவ்வாறு, காற்றின் தரம் வீழ்ச்சியடைவதனால் கண்ணுக்குப் புலனாகாத மிகச்சிறிய துகள்கள் சுவாசத்தின் மூலம் நுரையீரலுக்குள் உள்ளெடுக்கப்படுகின்றன. இதனால் மூச்சுத் திணறல், ஆஸ்துமா, புற்றுநோய் போன்ற சுவாச நோய்களும், கண்ணுக்குப் புலனாகாத சாம்பல் காற்றில் பரவுவதால், கண் எரிச்சல், தொண்டை, தலைவலி மற்றும் தோல் நோய்களும், குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிப்படைதல் போன்றனவும் ஏற்படுகின்றன.

நாட்டில் பெரும்பாலான நகரங்களில் இன்று புதன்கிழமை நாள் முழுவதும் ஆரோக்கியமற்ற நிலையில் காற்றின் தரம் காணப்படும் என மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகன புகைப் பரீட்சை நம்பிக்கை நிதியமும் தெரிவித்துள்ளது.

குறிப்பாக காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை மற்றும் பகல் 1 மணி முதல் 2 மணி வரை காற்றின் தரக் குறியீடு ஆரோக்கியமற்றுக் காணப்படும்.

எல்லை கடந்து வரும் மாசுபட்ட காற்றுச் சுற்றோட்டத்தினால் நாடு முழுவதும் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையில் சில நாள்களுக்கு அதிகரிக்கலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது விடயத்தில் உரிய சுகாதார வழிகாட்டுதல்களை நேரத்துடன் பின்பற்றுவது சாலச் சிறந்தது.





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் புத்தளம் மக்களுக்கு உதவி!

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த சேனைக்குடியிருப்பு, மணல் குன்று, அபயபுர, அரலியபுயன, பிரதேசங்களில் வாழும் பல்லின சமூகங்களை சார்ந்த, 80 குடும்பங்களை தெரிவு செய்து 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டம் சமூக சேவையாளரும், கருமாரி அம்மன் ஆலய ஸ்தாபகருமான எஸ். மகேந்திரன் தலைமையில், சேனைக்குடியிருப்பு பத்தினியம்மன் ஆலயத்தில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வில் ஆலய பிரதமகுரு, மருத்துவர் க.மு.திருச்செல்வம், ஓய்வு நிலை அதிபர் மா.நாகராஜா, ஆலய தலைவர் ரமணீதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த உதவித் திட்டங்களை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான ஆச்சிரம தொண்டர்கள் நேரடியாகச் சென்று வழங்கினர்.







# முன்பள்ளிக் கல்வியில் முறையான மாற்றம் அவசியம் என்கிறார் சத்தியலிங்கம் எம்.பி.!

***அது தொடர்பான பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பேன் என்றும் தெரிவிப்பு***

**(த.சுபேசன்)**

முன்பள்ளிக் கல்வியில் ஒழுங்கான கட்டமைப்புக்களை உருவாக்கி அதனூடாக கல்வி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் துறை சார்ந்தவர்களின் ஒத்துழைப்போடு நாடாளுமன்றில் பிரேரணையை சமர்ப்பிப்பேன் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முன்பள்ளிப் பருவம் தற்போது ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. பாதுகாக்கப்படுகிறது. முன்பள்ளிப் பருவத்தில் குழந்தைகளுக்கு சகல பழக்கவழக்கங்களும் பழக்கப்பட வேண்டும். கழிவு முகாமைத்துவம் தொடர்பாகப் போதிப்பது மிக அவசியமானது.

சுகாதாரம் தொடர்பில் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு அவசியம். பல சந்தர்ப்பங்களில் முன்பள்ளிச் சிரார்களுக்கு கடை உணவுகளை இடைவேளை உணவாக வழங்கி அனுப்புகின்றனர். ஆனால் இப்போது முன்பள்ளி ஆசிரியர்களுக்கு குழந்தைகளின் உணவு விடயத்தில் போதிய அறிவு உள்ளது. பெற்றோர்களுக்கு அது தொடர்பாக அறிவூட்ட வேண்டும்.

அத்தோடு படித்தவர்கள் கூட பொது மலசலகூடங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று தெரியாமல் உள்ளனர். மேலும் சில வாகன தரிப்பிடங்களில் 10 வாகனங்களை விடக் கூடிய வசதி இருந்தும் சிலரது தவறால் 5 வாகனங்களையே தரித்து விடக்கூடிய நிலைமை காணப்படுகிறது. இந்த பழக்கவழக்கங்கள் அனைத்துமே முன்பள்ளிப் பராயத்தில் இருந்தே கற்பிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக முன்பள்ளிகள் எழுத்துக் கற்றுக் கொடுப்பதற்கு மேலாக நல்ல பழக்கவழக்கங்களை அந்தப் பராயத்தில் கற்றுக் கொடுக்க வேண்டும்.நாட்டில் இடம்பெற்ற நீண்டகால யுத்தத்தால் சமூகக் கட்டமைப்பு உடைக்கப்பட்டுள்ளது. யுத்தம் காரணமாக சமூகக் கட்டமைப்பு உடைக்கப்பட்டதால் இன்று அயலவர்கள் யார் என்று தெரியாத நிலைமை உள்ளது. ஆனால் முன்னைய காலத்தில் ஓர் கிராமம் என்றால் அனைவருமே அறிமுகமானவர்களாகவும் உறவினர்களாகவும் இருப்பார்கள்.

இன்று இந்தச் சமூகக் கட்டமைப்பு உடைக்கப்பட்டதன் விளைவே பிறழ்வான நடத்தைகளில் இளைய சமுதாயம் ஈடுபட காரணமாக அமைந்துள்ளது.

எனவே, முன்பள்ளியில் போதிக்கப்படும் சிறந்த பழக்கவழக்கங்களே சிறந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்கும்.- என்றார்.

# இந்தியாவில் இருந்து கேரள கஞ்சாவை கடத்தி வந்தோர் யாழ்ப்பாணத்தில் கைது!

**(எஸ்.நிதர்ஷன்)**

இந்தியாவில் இருந்து 104 கிலோ கிராம் கேரள கஞ்சாவை இரண்டு படகுகளில் கடத்தி வந்த மூன்று பேர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் உதயபுரம் பகுதி கடற்பரப்பில் யாழ். மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் இன்று (05) கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

உதயபுரம் பகுதியை சேர்ந்த 24, 25, 27 வயதான மூன்று இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்களை



யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# அனைத்துத் துறையினரதும் ஒத்துழைப்புடனேயே தொழுநோயைக் கட்டுப்படுத்துவது சாத்தியமாகும்!

## மட்டு. சுகாதார வைத்திய அதிகாரி முரளீஸ்வரன் தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

தொழுநோயைக் கட்டுப்படுத்த ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியம். சுகாதாரத் துறையினர், கல்வித் துறையினர், பிரதேச அரச நிர்வாகத்தினர், ஊடகங்கள் மற்றும் பொது மக்கள் என்று அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே தொழுநோயை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும்.

இவ்வாறு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆர். முரளீஸ்வரன் , 2025 ஆம் ஆண்டில் தொழுநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைளுக்கான திட்டமிடலுக்கான ஒருங்கிணைப்பு கூட்டத்தின் நோக்கம் பற்றித் தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் அதிக எண்ணிக்கையிலான தொழுநோய் நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இது மாவட்டத்தில் தொழுநோய் தீவிரத்தை உணர்த்தி நிற்கின்றது.

2025 ஆம் ஆண்டில் தொழுநோய் தடுப்புக்கென மாவட்டத்தில் காணப்படும் அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்து பாரிய அளவிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஒருங்கிணைந்த கூட்டம்மொன்று அண்மையில் மருத்துவர் சதுர்முகம் ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில், மாவட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட உயர் அதிகாரிகள், தொழு நோய்க் கட்டுப்பாட்டுக்கு தொடர்ந்து தமது பங்களிப்பைச் செய்து வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கம், வருடாந்த தொழுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு அனைத்து துறையினரின் ஒத்துழைப்பையும் பெறுவதுடன், அவர்களின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் உள்வாங்குவதுமாகும்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பல்வேறு தரப்பினரும், தொழு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் தங்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பை உறுதி செய்தனர். தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்தனர். இந்த ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள், வருங்கால தொழுநோய் கட்டுப்பாட்டு திட்டங்களை வகுப்பதற்கும், அவற்றைச் சிறப்பாகச் செயற்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

இந்தக் கூட்டத்தைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொழு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரிக டாக்டர் லுபோஜிதா கமலராஜ் ஒழுங்கமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதுஇ

# மாவட்ட மதுப்பாவனையாளர் புனர்வாழ்வு மையம் செட்டிபாளையம் ஆஸ்பத்திரியில்!

(வி.ரி. சகாதேவராஜா)

வறுமை, வேலையின்மை போன்றவற்றாலும் உளநலச் சவால்களாலும் அதிகரித்துவரும் மதுப் பழக்கத்துக்கு அடிமையானவர்களுக்காக புனர்வாழ்வு மையத்தை அமைப்பதற்கான அவசியம் கருதி அதற்கான ஆலோசனைகளும் திட்டமிடலுக்குமான கலந்துரையாடல் ஒன்று குறித்த மையம் அமையவிருக்கும் செட்டிபாளையம் பிரதேச வைத்திய சாலையில் அண்மையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆர். முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மருத்துவ வைத்திய நிபுணர் பேராசிரியர் எம். உமாகாந்த், உளநல வைத்திய நிபுணர் மருத்துவர் எம். கணேசன், உளநல வைத்திய நிபுணர் மருத்துவர் ஆர். கமல்ராஜ், சுகாதார வைத்திய அதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட உளநலமேம்பட்டுக் குழுவினர், போதைப் பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர்கள், பணிப்பாளர் பணிமனையின் பொறுப்பு வைத்திய உத்தியோகத்தர்கள், உளவியலாளர், ஆலோசகர்கள் கலந்து கொண்டனர்.

நிலையத்துக்கான சிகிச்சை மற்றும் மருத்துவ வசதி முறைகளின் மேம்பாட்டு நடவடிக்கைகள், நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு பாதுகாப்பான சூழலை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள், வைத்தியர்கள் மற்றும் ஆலோசகர்கள் உட்பட மருத்துவ சேவை பணியாளர்களின் ஆளணித்தேவை, மது பழக்கவழக்கம் மற்றும் உளநல ஆரோக்கியம் சம்பந்தமான சிக்கலானவற்றை கையாள்வதற்கான பயிற்சித் திட்டங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் ஆலோசிக்கப்பட்டன.







இந்தக் கலந்துரையாடலை மாவட்ட உளநலப் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் டான் சௌந்தரராஜா ஒருங்கிணைத்திருந்தார்.



# தனங்களப்பில் உப்பள திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை!

## 1000 பேருக்குத் தொழில் வாய்ப்பு வழங்கத் திட்டம்

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தனங்களப்பு பகுதியில் கடந்த காலத்தில் தடைப்பட்ட உப்பு உற்பத்தி நிலையத்தை மீளவும் ஆரம்பிக்கும் நோக்கில் தேசிய உப்பு நிறுவனத் தலைவர் இன்று (05) புதன்கிழமை இந்த இடத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

புதிய அரசின் திட்டத்துக்கு அமைவாக உள்ளூர் உற்பத்தியை அதிகரித்தல், இறக்குமதிச் செலவீனங்களைக் குறைத்தல் ஆகியவற்றுக்கு அமைவாக கடந்த காலத்தில் சாவகச்சேரி, தனங்கிளப்பு பகுதியில் இயற்கையாக உப்பு வளம் அடையாளம் காணப்பட்ட நிலையில் தற்போது அதனை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.



கடந்த காலத்தில் இந்த உப்பளத் திட்டத்துக்குப் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களின் உரிய அனுமதிகள், பிரதேச சபையின் அனுமதி மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் பங்களிப்புடன் பயனாளிகள் தெரிவு ஆகியன இடம்பெற்ற போதிலும் சில காரணிகளால் தடைப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது மீளவும் அதனை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் ஊடாக பிரதேசத்தைச் சேர்ந்த வேலையற்ற இளைஞர்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

இந்த உப்பள நிறுவனம் தனியார், பொதுமக்கள் பங்குடமை நிறுவனமாகச் செயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது உப்பு நிறுவன தலைவர் ஹயன் வெல்லால மற்றும் பணியாளர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முறைப்பாடு அளிக்க வரும் தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்க மறுத்தால் நடவடிக்கை

## பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய

(மஸ்கெலியா)

பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு அளிக்க வரும் தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்க மறுக்கும் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்ட பதில் பொலிஸ்மா அதிபர், ஒழுக்காற்று நடவடிக்கைக்கு மேலதிகமாக, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பும் உள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு அளிக்க வரும் தரப்பினரிடம், முறைப்பாடுகளை ஏற்காமல், பல்வேறு காரணங்களைக் கூறி நிராகரிக்கப்படுகிறது என்று எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று பிரியந்த வீரசூரிய குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பாளர்களும் பிற அதிகாரிகளும் இத்தகைய மறுப்புக்கு பல்வேறு காரணங்களை முன்வைக்கின்றனர் என்று தகவல்கள் வந்துள்ளன என்று அவர் தனது சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.



பொலிஸ் நிலையங்களுக்குப் பதிவாகும் முறைப்பாடுகளை பதிவு செய்து விசாரணை செய்வது பொலிஸ் அதிகாரிகளின் கடமையும் பொறுப்பும் ஆகும் என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய வலியுறுத்தியுள்ளார்.

அதன்படி, இனிமேல், பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைக்கும் எந்தவொரு முறைப்பாட்டையும் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்க முடியாது என்று பதில் பொலிஸ்மா அதிபர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஊடக அடக்கு முறைகளுக்கு நீதிவேண்டும்; ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படவேண்டும்!

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

கடந்த காலங்களில் இந்த நாட்டில் ஊடகத்துறையின் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைச் செயற்பாடுகளுக்கு முறையான நீதி பெற்றுக கொடுக்கப்பட வேண்டும். அதேவேளை ஊடகத்துறையின் சுதந்திரமும், சுயாதீனத் தன்மையும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இவ்வாறு நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இன்று (05) இடம் பெற்ற ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் காலத்துக்குக் காலம் ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று சொல்லப்படுகின்ற ஊடகத்துறை நசுக்கப்படுகின்ற அவல நிலையே தொடர்கின்றது.

அந்தவகையில் கடந்த போர்க் காலப் பகுதியில் பல ஊடகவியலாளர்களும், ஊடகப் பணியாளர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். ஊடகவியலாளர்கள் பலர் கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பல ஊடகவியலாளர்களும் ஊடகப் பணியாளர்களும் இந்த நாட்டில் தமக்கு இருந்த அச்சுறுத்தல் நிலைகளால் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இதனைவிட ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக தராகி சிவராம், மயில்வாகனம் நிமலராஜன், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், ஐயாத்துரை நடேசன், லசந்த விக்கிரமதுங்க போன்ற சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் கடந்த காலத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதை உதாரணமாகச் சொல்ல முடியும்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டியங்கும் உதயன் பத்திரிகை நிறுவனம், சிரச ஊடக வலையமைப்பின் தெபானாம கலையகம் என்பன கடந்த காலங்களில் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி ஹோமாகம நகரில் பிரகீத் எக்னெலிகொட என்ற ஊடகவியலாளர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். வடக்குக் கிழக்கில் தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி அலையும் உறவுகளைப் போலவே அவரது குடும்பமும், கடந்த ஒன்றரைத் தசாப்த காலமாகக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதிகேட்டு தொடர்ந்து



போராடி வருகின்றது.

இந்த நிலையில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ வின் உத்தரவுக்கு அமைவாகவே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார் என்று தன்னை முன்னாள் கடற்படை வீரர் என அடையாளப்படுத்தும் ஆர். பி.டி.பி.பிரசன்ன பியசாந்த என்பவர் அண்மையில் சுதா கிரியேசன்ஸ் எனும் யூடியூப் தளத்துக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார். இதனை ஆராயுங்கள்.

இந்த நிலையில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசு இது தொடர்பில் அவரது குடும்பத்துக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை போருக்குப் பின்பு, தற்போதும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்ற, அச்சுறுத்தப்படுகின்ற சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

தற்போது பொலிஸார், புலனாய்வாளர்கள், இராணுவத்தினர், சட்டவிரோத தொழில்களில் ஈடுபடும் நபர்கள் எனப் பல்வேறு தரப்புக்களாலும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படும் நிலமைகள் காணப்படுகிறது என்று ஊடகவியலாளர்களால் தெரிவிக்கப் படுகின்றது.

அந்தவகையில் கடந்த டிசெம்பர் 26 அன்று கிளிநொச்சி ஊடக அமையத்தின் செயலாளரும், சுயாதீன ஊடகவியலாளருமான முருகையா தமிழ்ச்செல்வன் என்னும் ஊடகவியலாளரை, கிளிநொச்சி ஏ-9 வீதியில்வைத்து வாகனத்தில் வந்தவர்கள் கடத்த முற்பட்டுள்ளனர்.

கடத்தல் முயற்சி கைகூடாமல் போகவே அவரைக் கடுமையாக தாக்கியதுடன் எச்சரித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதற்கு கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு தாக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதியைப்பெற்றுக் கொடுப்பதுடன், குற்றவாளிகளுக்கு மிகவும் கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும்.

அதேவேளை அண்மையில் ஊழல் மோசடி தொடர்பில் செய்தி வெளியிட்டமைக்காக கிளிநொச்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் சுப்பிரமணியம் பாஸ்கரன், ஊழல் மோசடியுடன் தொடர்புடைய குழுவால் அவருடைய வீட்டு நுழைவாயில் சேதப்படுத்தப்பட்டதுடன், மிகக் கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஜனவரி மாதத்திலேயே கூடுதலாக ஊடக அடக்கு முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் ஆண்டு தோறும் ஜனவரி 31 ஆம் திகதி ஊடகவியலாளர்களால் இது நினைவு கூரப்பட்டு வருகின்றது. இம்முறையும் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜனவரி என்பது ஊடகவியலாளர்கள் விடயத்தில் இன்னமும் கறுப்பாகவே உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மரக் கடத்தல்கள் இடம்பெறுவதாக பலரும் சுட்டிக்காட்டியபோது, செய்தி சேகரிக்கச் சென்ற கணபதிப்பிள்ளை குமணன், சண்முகம் தவசீலன் ஆகியஊடகவியலாளர்கள் மரக்கடத்தல்காரர்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

பிறிதொருதடவை முல்லைத்தீவு ஊடக அமையத்தினுள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாதவர்கள், ஊடகஅமையத்தின் செயற்பாடுகள் குறித்துக் கடுமையாக விசாரித்துள்ளனர்.

இத்தோடு முல்லைத்தீவு குருந்தூர்மலையில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் பொலிஸாரால் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டிருந்தார். இப்படியாகப் பல சம்பவங்கள் உள்ளன. அனைத்தையும் சொல்வதற்கு நேரம் போதாது. வவுனியா, மன்னாரிலும் ஊடகவியலாளர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தப்பட்டுள்ளனர், தாக்கப்பட்டுள்ளனர்.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசு வலிகளை உணர்ந்தவர்கள். ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தையும், அவர்களின் சுயாதீனத் தன்மையையும் உறுதிப்படுத்தவேண்டும்.- என்றார்.

## தேங்காய் ஏற்றத் தடையாக அரச படைகள்;

# கேப்பாப்புலவு மக்களின் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்!

### சபையில் ரவிகரன் எம்.பி. காரசாரம்



(விஜயரத்தினம் சரவணன்)

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான தெங்குப் பயிற்செய்கைக் காணிகள் உட்பட, பல காணிகளை அரச படைகள் அபகரித்து வைத்துக் கொண்டு இந்த நாட்டின் தேங்காய் ஏற்றுமதிக்குத் தடையாக உள்ளனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது முல்லைத்தீவு கேப்பாப்புலவில் இராணுவத்தினர் அபகரித்துள்ள மக்களின் பூர்வீகக் காணிகளில் அதிகளவு தெங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதையும், அக் காணிகளின் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த காணிகள் இராணுவத்தின் பிடியிலிருந்து உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இன்று (05) இன்று இடம்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த ஏற்றுமதி இறக்குமதி இறக்குமதி தொடர்பான விவாதத்தில் நான் குறிப்படவிரும்புவது என்னவெனில், தேங்காய் ஏற்றுமதி செய்வதற்கு இடையூறுகள் காணப்படுகின்றன. குறிப்பாக வடக்கு, கிழக்கில் மக்களுக்குச் சொந்தமான காணிகளைப் படையினர் இன்னமும் விடுவிப்புச் செய்யவில்லை.

புதிய ஆட்சியின் பின்னர் வடக்கு, கிழக்கில் ஒருசில இராணுவ முகாம்கள் விடுவிக்கப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் இன்றளவில் பலநூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள், மக்களின் வாழ்வாதார நிலங்கள் படையினரின் வசமே உள்ளன.

பூர்வீக நிலங்களை இழந்து அகதிகளாக இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர்களின் அரவணைப்பிலுமே இவர்களின் வாழ்க்கை கழிகின்றது.

போர் மௌனித்து 15 ஆண்டுகள் ஆகியும் கூட இன்னமும் அகதிகளாக நாட்டின் குடிமக்கள், தமிழ் மக்கள் வாழும் அவல நிலையை எண்ணிப் பாருங்கள். தமிழர்களை அவர்களின் வாழிடங்களிலேயே வாழவிடுங்கள்.

இவற்றில் ஒன்றாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கேப்பாபிலவு, புலக்குடியிருப்பு மக்களின் அவலநிலை இன்னும் தீர்ந்தபாடில்லை. அதிலிருந்து மீண்டவர்கள் சிலர். இன்னும் 54குடும்பங்கள் தங்களைத் தங்களுடைய பூர்வீக இடத்தில் குடியமர்த்தமாட்டார்களா என்ற ஏக்கத்தோடு இடைத்தங்கல் முகாம்களில் இருந்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தங்களுடைய சொந்த இடத்தில் இருந்த போது எந்தக் குறையும் தங்களுக்கு இல்லை. வளமானபூமி, ஒரு பக்கம் ஆறு அதனால் மீன், இறாலுக்கு பஞ்சமில்லை. தங்களுடைய காணியில் குடியிருப்பு நிலம் தவிர்ந்த மிகுதி நிலத்தில் காலங்களுக்கேற்ப பயன்தரக் கூடிய தோட்டச்செய்கை, வயல்கள், இதுதவிர தென்னைகள் தாராளமாக ஒவ்வொரு காணிகளிலும் உண்டு என்னு மனம் வெதும்புகின்றனர்.

இன்றைய தேங்காயின் விலை மிகமிக அதிகம். எண்ணிப்பாருங்கள் மக்கள் எவ்வளவு வேதனைப்படுவார்கள் என்று.

இவ்வாறு சகல விதத்திலும் தங்களின் பூர்வீக காணிகளில் பயன்பெற்று வாழ்வாதாரத்தை ஈடுசெய்து வாழ்ந்து வந்த குடும்பங்கள், தற்போது மிகவும் நொந்து போயுள்ளன. நான் ஏற்கனவே குறிப்பிட்ட 54 குடும்பங்களின் 55 ஏக்கர் நிலத்தை இராணுவம் அபகரித்து வைத்துள்ளது. இதில் சில காணிகள் பலத்த நிலமீட்புப் போராட்டங்களின் பின்புதான் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டன. அதேபோல அந்த மக்களின் பிரதி நிதியாகக் கேட்கின்றேன். 54 குடும் பங்களின் காணிகளையும் விடுவிப்புச் செய்யுங்கள். பொறுப்பாக இருக்கும் அமைச்சுக்கள் இந்த மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.- என்றார்.

## பட்டிப்பளை பிரதேச செயலக பொங்கல் விழா நிகழ்வுகள்

(வவுணதீவு நிருபர்)

மட்டக்களப்பு, மண்முனை தென் மேற்கு, பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் பொங்கல் விழா பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் இன்று (05) புதன்கிழமை கடுக்காமுனை நெக்கட்டி பிள்ளையார் மாரியம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கடுக்காமுனை கிராம பொது அமைப்புக்களும் இணைந்து, பட்டிப்பளையில் நெல் அறுவடை செய்து, ஊர்வலமாக கடுக்காமுனை நெக்கட்டி பிள்ளையார் மாரியம்மன் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கு பாரம்பரிய முறைப்படி அறுவடை செய்த நெல் குற்றி அரிசியாக்கி பொங்கல் பொங்கும் வைபவம் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதான பொங்கல் பானை ஏற்றப்பட்டு பொங்கல் இடம் பெற்றது.

பிரதேச செயலக திணைக்கள பிரிவுகள் யாவும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் பொங்கல் வைத்தனர்.

ஆலய முன்றலில் பாரம்பரிய சம்பிரதாய முறையில் பாடல்கள் உள்ளிட்ட பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், உதவிப் பிரதேச செயலாளர் மேனகா புவிக்குமார் உள்ளிட்ட பிரதேச செயலக திணைக்கள தலைவர்கள், கிராம மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.









அமெரிக்க மேலாதிக்கமா அல்லது டிரம்ப்பின் அடாவடித்தனமா?

# டிரம்பின் காசாவை கைப்பற்றும் திட்டம்!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

**(கனடா, மெக்சிக்கோ மேலான பொருளாதார வரி விதிப்பும், கிரின்லாந்து, பனாமா கால்வாயை மீண்டும் கைப்பற்றும் முயற்சிகளுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை மேற்குலகம் முன்வைத்துள்ளது. அமெரிக்கா அதன் இராணுவ மற்றும் பொருளாதார வலிமையைப் பயன்படுத்தி பாலஸ்தீன தாயகத்மை அச்சுறுத்துவது நிச்சயமாக அரபுலகில் பலத்த கொந்தளிப்பை ஏற்படுத்தும்.)**

அமெரிக்காவின் வர்த்தக வரிகள், பொருளாதர தடைகள் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களை கிழித்தெறியும் அச்சுறுத்தல்களால் மற்ற நாடுகளை கொடுமைப் படுத்துவது டிரம்ப் அரசின் தவறான அணுகுமுறை என்றே தோன்றுகிறது.

### டிரம்ப்பின் அடாவடித்தனம்

ஏனெனில் அமெரிக்க நலன்களுக்கு எப்போதும் முக்கியத்துவம் அளிக்கும் ஐரோப்பிய நாடுகள், இந்த விவகாரத்தில் அமெரிக்காவை கடுமையாக விமர்சித்து வருகின்றன. குறிப்பாக கனடாவில் பாரிய அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை ட்ரம்ப் அரசு தோற்றுவித்துள்ளது.

இவ்வாரம் அமெரிக்க அதிபரின் புதிய கருத்துக்கு உலகம் முழுவதிலும் பாரிய எதிர்ப்பு எழுந்துள்ளது. பாலஸ்தீனியர்களை அவர்களின் சொந்த நிலத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கில் டிரம்ப் கூறிய விடயம் சர்வதேச அரங்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா அதன் இராணுவ மற்றும் பொருளாதார வலிமையைப் பயன்படுத்தி பாலஸ்தீன தாயகத்தை அச்சுறுத்துவது நிச்சயமாக அரபுலகில் பலத்த கொந்தளிப்பை ஏற்படுத்தும்.

டிரம்ப் தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்ததும் உடனடியாகக் கனடா, மெக்சிக்கோ மேலான பொருளாதார வரி விதிப்பும், கிரின்லாந்து, பனாமா கால்வாயை மீண்டும் கைப்பற்றும் முயற்சிகளுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை மேற்குலகம் முன்வைத்துள்ளது.

டிரம்ப் அரசின் இதுபோன்ற செயல் உண்மையில் அனைத்து நாடுகளுக்கும் தாக்கங்களை ஏற்படுத்தும். மேலும் சர்வதேச ஒழுங்கை குறை மதிப்புக்கு உட்படுத்தும் அபாயமும் உள்ளது. உலக நாடுகளின் பிரதிநிதியாகக் கூறப்படும் ஐக்கிய நாடுகள் சபை, உலக அமைதிக்காக, அத்தகைய நடவடிக்கைக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

### அமெரிக்க மேலாதிக்கம்?

இருப்பினும், அமெரிக்காவில் உள்ள சிவப்பு இந்தியர்களை அவர்களின் பழங்குடி நிலங்களில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளனர் என்பதை நினைவில் கொள்வது முக்கியம் ஆகும்.

இதேவேளை ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், அமெரிக்கா காசா பகுதியை “கையகப்படுத்தும்” என்றும், பாலஸ்தீனியர்கள் நிரந்தரமாக அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றும் கூறியது, எகிப்து மற்றும் ஜோர்டான் போன்ற நாடுகளில் 2.2 மில்லியன் மக்களை மீள்குடியேற்ற விரும்புவது, இஸ்ரேலிய அரசுக்கு மூலோபாய அடிப்படையில் வெற்றியின் அறிகுறியாகும்.

இவ்வாரம் நேற்று செவ்வாயன்று வெள்ளை மாளிகையில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் பேச்சு நடத்தியபோது, காசாவில் உள்ள அனைத்து பாலஸ்தீனியர்களும் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்று டிரம்ப் கூறினார்.

காசா பகுதியை அமெரிக்கா ஆக்கிரமித்து கைய

தொடர்ச்சி▼



# டிரம்பின் காசாவை கைப்பற்றும் திட்டம்!

**தொடர்ச்சி▲**

கப்படுத்தும், மேலும் அதனுடன் நாங்கள் ஒரு ஒப்பந்தம் செய்து, நாங்கள் அதை சொந்தமாக்கிக் கொள்வோம். மேலும் அந்த இடத்தில் உள்ள அனைத்து ஆபத்தான வெடிக்காத குண்டுகள் மற்றும் பிற ஆயுதங்களையும் அகற்றுவதற்கு பொறுப்பாவோம் என்று டிரம்ப் கூறினார்.

**காசா கட்டுப்பாடு அமெரிக்கா வசம்!**

இவ்வாரம் செவ்வாய்க்கிழமை இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்தபோது, காசாப் பகுதியை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொள்ளலாம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரவித்துள்ளார்.

டிரம்ப் மீண்டும் பதவியேற்ற பிறகு வெள்ளை மாளிகைக்குச் சென்ற முதல் வெளிநாட்டுத் தலைவர் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆவார்.

போரால் சிதைந்த காசா பகுதியின் உரிமையை அமெரிக்கா எடுத்துக் கொள்ளும் என்று நெதன்யாகுவுடன் இணைந்த கூட்டுச் சந்தித்திப்பிலேயே அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இக்கருத்தைக் கூறினார்.

காசா பகுதியை அமெரிக்கா கைப்பற்றும், நாங்களும் அதனுடன் இணைந்து செயல்படுவோம். நாங்களே அதை சொந்தமாக்கிக் கொள்வோம். காசாவை அபிவிருத்தி செய்வதாகவும், சவுதி அரேபியா அங்கு உதவியாக இருக்கும் என்றும் டிரம்ப் உறுதியளித்தார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் மீதான இஸ்ரேலிய இறையாண்மையை அங்கீகரிப்பது குறித்து வாஷிங்டன் எந்த நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை என்றும், ஆனால் அடுத்த மாதத்தில் இந்த தலைப்பில் ஒரு அறிவிப்பை வெளியிடும் என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் சவுதி அரேபியாவுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் என்று தான் நம்புவதாக அவர் கூறினார். இஸ்ரேலுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையிலான சமாதானம் சாத்தியமானது மட்டுமல்ல, அது நடக்கும் என்று நான் நினைக்கிறேன் என்று டிரம்ப் கூறியுள்ளார்.

பாலஸ்தீனியர்களை காசாவிலிருந்து வேறு இடத்துக்கு மாற்ற முடியும் என்று டிரம்ப் கூறியதுடன், பாலஸ்தீன மக்கள் இப்போது காசாவில் வசிக்க முடியாது. அவர்களுக்கு வேறொரு இடம் தேவை என்று நான் நினைக்கிறேன். அது மக்களை மகிழ்விக்கும் இடமாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன் என்று டிரம்ப் மேலும் கூறியதை அடுத்து இஸ்லாமிய நாடுகள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன.

**காசாவுக்கு அமெரிக்க துருப்புக்கள் ?**

காசாவில் இருந்து இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்களை எகிப்து, ஜோர்டான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாற்றுவது தொடர்பான திட்டத்தை டிரம்ப் முன்னர் முன்மொழிந்து இருந்தார். ஆனாலும் அம்மான் மற்றும் கெய்ரோ இரண்டும் இந்த திட்டத்தை நிராகரித்துள்ளன என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

காசாவுக்கு அமெரிக்க துருப்புக்களை அனுப்புவீர்களா என்று கேட்டதற்கு, டிரம்ப், தேவையானதைச் செய்வோம், நாங்கள் அதை உருவாக்கப் போகும் பகுதியை நாங்கள் கையகப்படுத்தப் போகிறோம். ஆயிரக் கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கப் போகிறோம். இது மத்திய கிழக்கு மிகவும் பெருமைப்படும் திட்டங்களில் ஒன்றாகும் என்றார்.

ஆயினும் டிரம்பின் இந்த திட்டம் பல தசாப்த கால அமெரிக்க கொள்கையை முறியடித்து, அரபு உலகம் முழுவதும் சீற்றத்தைத் தூண்டும். அங்கு வாஷிங்டனின் நட்பு நாடுகள் பாலஸ்தீனியர்களை கட்டாயமாக இடம் பெயர்வதற்கு எதிராக நீண்ட காலமாக எச்சரித்து வருகின்றன.

# டில்லி சட்டப்பேரவை தேர்தல்: மந்தநிலையில் வாக்குப்பதிவு

தலைநகர் டில்லியில் இன்று சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுகிறது. வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்குகிறது.

டில்லி சட்டப்பேரவையின் பதவிக்காலம் பெப்ரவரி 23 ஆம் திகதியுடன் முடிகிறது. இங்கு மொத்தம் 70 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. புதிய அரசை தேர்ந்தெடுப்பதற்காக டில்லியில் இன்று சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுகிறது. வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கியது. டில்லியில் மொத்தம் 1.56 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 83.76 லட்சம் பேர் ஆண்கள், 72.36 லட்சம் பேர் பெண்கள், 1,267 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள். இவர்கள் வாக்களிப்பதற்காக டில்லி முழுவதும் 13,766 வாக்குச் சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தலை சுமூகமாக நடத்த 220 கம்பெனி துணை இராணுவப் படை வீரர்களும், 19,000 ஊர்காவல் படையினரும், டில்லி பொலிஸார் 35,626 பேரும் தேர்தல் பாது காப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

டில்லியில் ஆளும் ஆம் ஆத்மி, பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகள் இடையே மும்முனை போட்டி ஏற்பட்டுள்ளது. இதனால் பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, டில்லி முன்னாள் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால், மக்களவை எதிர்க் கட்சி தலைவர் ராகுல் காந்தி உட்பட தேசியத் தலைவர்கள் பலர் இங்கு கடந்த சில நாட்களாக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். டில்லியில் எந்த கட்சி வெற்றி பெறும் என்பதை வாக்காளர்கள் இன்று தீர்மானிக்கின்றனர்.

டில்லியில் முதல்வர் அதிஷி கல்காஜி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் அல்கா லம்பா, பா.ஜ.க. வேட்பாளர் ரமேஷ் பிதூரி ஆகியோரை எதிர்த்து போட்டியிடுகிறார்.

முன்னாள் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால், மீண்டும் புதுடில்லி தொகுதியில் போட்டியிடுகிறார். இங்கு பா.ஜ.க. வேட்பாளர் பர்வேஷ் வர்மா, காங்கிரஸ் வேட்பாளர் சந்தீப் தீக்ஷித் ஆகியோர் போட்டியிடுகின்றனர். ஆம் ஆத்மி மூத்த தலைவர் மனீஷ் சிசோடியா ஜங்புரா தொகுதியில் போட்டியிடுகிறார்.










# இலங்கை மீது சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்

## புதுச்சேரி மீனவர்கள் கோரிக்கை

இலங்கைக்கு எதிராகச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்காக மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தும் வகையில் தமிழக மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் எனப் புதுச்சேரி மீன வர்கள் கோரியுள்ளனர்.

இந்த விடயத்தை வலியுறுத்தி அவர்கள் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர் என இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக தங்களுக்கு ஆயுதம் வழங்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.




# சீனா, ஹொங்கொங் பொதிகள் சேவைக்கு தடைபோட்டது அமெரிக்க தபால் சேவை

மறு அறிவிப்பு வரும் வரை சீனா மற்றும் ஹொங்கொங்கில் இருந்து பொதிகள் சேவையை ஏற்றுக்கொள்வதை நிறுத்தியுள்ளதாக அமெரிக்க தபால் சேவை தெரிவித்துள்ளது.

எனினும், இந்த இடைநீக்கத்தினால் கடிதங்கள் விநியோக சேவை பாதிக்கப்படாது என்று அமெரிக்க தபால் சேவையின் இணையத்தள அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

USPS இந்த முடிவிற்கான காரணத்தை வெளியிடவில்லை.

எனினும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சீனாவில் இருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருள்களுக்கும் மேலதிகமாக 10 வீத வரி விதித்ததை அடுத்து இந்த நடவடிக்கை வந்துள்ளது.



இதற்கு பதிலடியாக சீனா சில அமெரிக்க இறக்குமதி பொருள்கள் மீது வரியை அமல்படுத்துவதாக நேற்று செவ்வாய்க்கிழமை கூறியது.

அமெரிக்க நிலக்கரி, திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுக்கு (LNG) 15 வீதம் மற்றும் மசகு எண்ணெய், விவசாய உபகரணங்கள் மற்றும் மேலும் சில பொருள்களுக்கு 10 வீதம் வரி விதிக்கப்படும் என்று சீனாவின் நிதியமைச்சு கூறியது.

அமெரிக்க ஏற்றுமதிக்கான புதிய கட்டணங்கள் பெப்ரவரி 10 ஆம் திகதி தொடங்கும் என்றும் சீனாவின் நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், அமெரிக்காவின் கூகுள் நிறுவனத்தின் ஏகபோகத்திற்கு எதிரான விசாரணையைத் தொடங்குவதாகவும் சீனா கூறியது.

இதனிடையே, தேசிய பாதுகாப்பு நலன்களைப் பாதுகாப்பதற்காக டங்ஸ்டன், டெல்லூரியம், ருத்தேனியம் மற்றும் மாலிப்டினம் மற்றும் ருத்தேனியம் ஆகிய தனிமப் பொருட்களின் மீது ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதிப்பதாக சீனாவின் வர்த்தக அமைச்சகமும் அதன் சுங்க நிர்வாகமும் தனித்தனியாக தெரிவித்தன.

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகல்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உட்பட ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு அமைப்புகளிலிருந்து அமெரிக்கா விலகுவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பான நிர்வாக உத்தரவில் நேற்று கையெழுத்திட்டுள்ளதுடன், பாலஸ்தீனியர்களுக்கான ஐக்கிய நாடுகள் நிவாரண அமைப்பு நிதியையும் அமெரிக்கா நிறுத்தியுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

அத்தோடு, ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு செயல்பாடுகள் குறித்த மறுஆய்வுக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார்,

ஐக்கிய நாடுகள் அமைப்புகளுக்குள் அமெரிக்க எதிர்ப்பு இருப்பதாக கருதப்படுவதனால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை செயலாளர் தெரிவித்துள்ளார்.



கடந்த ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு அதிரடி முடிவுகளை எடுத்து வருவதுடன், முன்னதாக ஜெனீவா காலநிலை மாற்ற ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாக அறிவித்தார்.

பாலஸ்தீனியர்களுக்கான ஐக்கிய நாடுகள் நிவாரண அமைப்பு ஹமாஸ் அமைப்பினருக்கு அடைக்கலம் வழங்குகிறது என நேதன்யாகு ஏற்கனவே குற்றம்சாட்டியிருந்தார்.

ஆனால் பாலஸ்தீனியர்களுக்கான ஐக்கிய நாடுகள் நிவாரண அமைப்பு அதனை திட்டவட்டமாக மறுத்ததைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டில் அமெரிக்கா பாலஸ்தீனியர்களுக்கான ஐக்கிய நாடுகள் நிவாரண அமைப்பு நிதியை தாற்காலிகமாக நிறுத்திய நிலையில் தற்போது டொனால்ட் ட்ரம்ப அந்த தடையை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார்.

13 மாதகால போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில் 62 ஆயிரம் பேர் உயிரிழந்த காசா உள்ளிட்ட பாலஸ்தீன பகுதிகளுக்குள் லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை நோக்கி மீண்டும் திரும்பி வருகின்றனர்.

இலட்சக்கணக்கானோருக்கு மருத்துவ உதவிகளும் மனிதாபினான உதவிகளும் தேவைப்படும் சூழலில் பாலஸ்தீனியர்களுக்கான ஐக்கிய நாடுகள் நிவாரண அமைப்பு நிதியை அமெரிக்கா நிறுத்தியுள்ளது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

புதன்கிழமை 05/02/2025

## ரொறன்ரோவில் ஒருவர் கொலை; சிறுமிகளுக்கு எதிராக வழக்கு பதிவு

ரொறன்ரோவில் ஒருவரை படுகொலை செய்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பதின்ம வயதுடைய சிறுமிகள் இந்த 03



# அமெரிக்க - கனடா வர்த்தகப் போர் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது

**அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையிலான வர்த்தகப் போர் நிலைமை தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள் ளது.**

**அமெரிக்க கனடிய தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். கனடிய ஏற்றுமதிகள் மீது அமெரிக்கா 25 வீதம் வரி விதிப்பை அறிவித்திருந்தது.**

**இந்த வரி விதிப்பு தீர்மானத்திற்கு பதிலடியாக கனடாவும் அமெரிக்கா ஏற்றுமதிகள் மீது வரி விதிப்பதாக அறிவித்திருந்தது.**

இவ்வாறான ஒரு பின்னணியில் இரு நாடுகளின் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இதனை தொடர்ந்து வரி விதிப்பது குறித்த தீர்மானத்தை ஒத்தி வைப்பதற்கு இரு நாட்டுத் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

உத்தேச வரிவிதிப்பு யோசனை 30 நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.ட்ரம்ப் மற்றும் ட்ரூடோ ஆகியோர் இரண்டு தடவைகள் தொலைபேசி ஊடாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

எல்லை பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கப் போவதாகவும் சட்டவிரோத குடியேறிகள் மற்றும் குற்றவாளிகள் அமெரிக்காவிற்குள் பிரவேசிப்பதை தடுக்க பாதுகாப்பை பலப்படுத்த உள்ளதாகவும் கனடா உறுதிமொழி வழங்கியுள்ளது.



## கனடாவின் எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்துமாறு கோரும் எதிர்க்கட்சி

எல்லைப் பகுதியில் பாதுகாப்பினை பலப்படுத்துமாறு கனடிய எதிர்க்கட்சித் தலைவர் பியே பொலியேவ் கோரியுள்ளார்.

கனடிய - அமெரிக்க எல்லைப் பகுதியில் பாதுகாப்பினை பலப்படுத்த வேண்டுமென கோரியுள்ளார்.

ஆயுத படையினரையும் உலங்கு வானூர்திகளையும் ஈடுபடுத்த வேண்டுமென கோரியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் எல்லைப் பாதகாப்பு கரிசனைக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்

எல்லைப் பாதுகாப்புப் படையினர், எல்லைக் 03






# கனடாவில் கொலை சம்பவம் தொடர்பில் இருவர் கைது

கனடாவில் படுகொலை சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய இரண்டு பேரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கனடாவின் டொரன்டோ பகுதியில் இடம்பெற்ற படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஆண் ஒருவரையும் பெண் ஒருவரையும் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி இந்த படுகொலை சம்பவம் இடம்பெற்றுள்ளது. ரொறன்ரோவில் இந்த ஆண்டில் பதிவான முதல் படுகொலை சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.


மெடிசன் மற்றும் ப்ளூர் வீதிகளை அருகாமையில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் 27 வயதான டராபாகோடி சாவான் என்ற நபர் உயிரிழந்துள்ளார்.

படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் ஒஷாவோ பகுதியைச் சேர்ந்த 24 வயதான ப்ரூக்லைன் வாஸ் மற்றும் 21 வயதான கமரூன் பிரவுன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இருவருக்கு எதிராகவும் கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.



# ஒஷாவாவில் வீதி விபத்து; 18 வயது இளைஞன் பலி

கனடாவின் ஒஷோவா பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 18 வயது இளைஞன் உயிரிழந்துள்ளார்.

கிரான்ட்விவ் மற்றும் ரெட்பர்ன் வீதிகளுக்கு அருகாமையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் தர்ஹம் பிராந்திய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி வாகனம் மின்கம்பம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது. மேற்படி, இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார் என தெரிவிக் கப்படுகிறது.

இந்த விபத்து குறித்து வேறும் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

விபத்து காரணமாக மேற்படி பகுதியில் சில மணித்தியாலங்களுக்கு வீதி போக்குவரத்து தடைபட்டிருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




# அமெரிக்காவுக்கு எதிரான ஒன்றாரியோவின் பதிலடி நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது

கனடிய ஏற்றுமதிகள் மீது வரி விதிப்பதாக அமெரிக்கா அறிவித்த தனை தொடர்ந்து ஒன்றாரியோ மாகாணம் சில பதிலடி நடவடிக்கை களை அறிவித்திருந்தது.

எனினும் இறுதி நேரத்தில் இந்த வரி விதிப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஒன்றாரியோ மாகாணத்தினால் உத்தேசிக்கப்பட் டிருந்த பதிலடி நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒன்றாரியோ மாகாணத் தின் முதல்வர் டாக் போர்ட் இந்த தீர்மானங்களை எடுத்திருந்தார்.

அமெரிக்கா வரி விதிப்பு தொடர் பில் நல்ல செய்தி கிடைத்துள்ளதாக வும் இதனால் பதிலடி நடவடிக்கை இடைநிறுத்தப்படுவதாகவும் டாக் போர்ட் தெரிவித்துள்ளார்.

இந்த வரி விதிப்பானது மாகாண பொருளாதாரத்தை மோசமாக பாதிக் கும் என அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.



வரிவிதிப்பு தொடர்பில் குரல் கொடுத்த தொழிற்சங்கங்கள், பணியா ளர்கள், தொழிற்சங்க தலைவர்கள் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அனைத்து கனடியர்களுக்கும் நன்றி பாராட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கனடிய மற்றும் அமெரிக்க தலை வர்களுக்கிடையில் நடைபெற்ற தொலைபேசி உரையாடலை தொடர்ந்து வரி விதிப்பு தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வரிவிதிப்பு அறிவிப்பை அடுத்து அமெரிக்கா மீது சில கெடுபிடிகளை விதிக்க ஒன்றரியோ மாகாண அரசாங்கம் திட்டமிட்டு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடவைகளில் மட்டும் கடமையில் ஈடுபடுத்தாது ஒட்டு மொத்த எல்லைப் பகுதிகளிலும் கடமையில் ஈடு படுத் தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

எல்லைப் பாதுகாப்பு பணிகளின் போது நவீன கருவிகளை பயன்படுத்தி சோதனை மேற்கொள்ளப்பட வேண் டுமெனவும் கோரியுள்ளார்.

## ரொறன்ரோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலை சம்பவத்தை மேற் கொண்டனர் என குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.

நபர் ஒருவரை கொடூரமாக தாக்கி படுகொலை செய்தனர் என இந்த இரண்டு சிறுமிகள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி நபர் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் படுகொலை செய்யப்பட்டிருந்தார். 59 வயதான கெனத் லீ என்ற நபரே இவ்வாறு படு கொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 13 முதல் 16 வயதுடைய 8 சிறுமிகள் கைது செய்யப் பட்டிருந்தனர்.

இந்த கைதுகளில் இரண்டு சிறுமிக ளுக்கு எதிராக நேரடி கொலை குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

